**வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி - 2016**

---

வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் (''வங்கி'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது அபிப்பிராயத்தில், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகளின் மீதான அறிக்கை

(i) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில் :

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வங்கியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களும் விளக்கங்களும் நான் பெற்றிருக்கின்றேன்.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் வங்கியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

(ii) 1998 இன் 30 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டம் மற்றும் பின்தொடர் திருத்தங்களினால் வேண்டப்பட்ட தகவல்களுக்கமைய இந் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கடன்கள் மற்றும் முற்பணங்களின் நட்டக்கழிவு கணக்கீட்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட கொள்கையொன்று வங்கியினால் கண்டறியப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

அனுமதிபெற்ற விசேட வங்கிகளின் பணிப்பாளர்களுக்கான கூட்டிணைந்த ஆளுகை மீதான 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டத்தின் 3(2) ஆம் பிரிவின் பிரகாரம், பணிப்பாளர் சபை (சபை) ஆகக்குறைந்தது 7 உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டில் தலைவர் உள்ளடங்கலாக 6 உறுப்பினர்களை மாத்திரம் சபை கொண்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 192.7 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 258.7 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறியலாபத்தினை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 66 மில்லியன் அல்லது 34 சதவீத அதிகரிப்பொன்றினை சுட்டிக்காட்டுகின்றது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது வட்டி வருமானம் ரூபா 75 மில்லியனால் அதிகரித்திருந்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 வங்கியின் பெறுமதி சேர்க்கை

வங்கியின் நிதிசார் பெறுமதி சேர்க்கை, முன்னைய ஆண்டிற்கான ரூபா 431 மில்லியன் பெறுமதி சேர்க்கையுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான ரூபா 229 மில்லியன் கூட்டுத்தொகையான தனிநபர் ஊதியம், வரிச் செலவினங்கள் மற்றும் பெறுமானத்தேய்வினை கருத்திற் கொண்ட பின்னர் ரூபா 488 மில்லியனாகக் காணப்பட்டது.

### 3.3 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

#### 3.3.1 முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், அனுமதி பெற்ற விசேட வங்கி (எல்எஸ்பீ) துறை விகிதங்களுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் முக்கிய சில கணக்கீட்டு விகிதங்கள் பின்வருமாறுள்ளன.

| விகிதப் பெயர் | துறை விகிதம் (அனுமதி பெற்ற விசேட வங்கி) | 2016 | 2015 |
|---|---|---|---|
| | சதவீதம் | சதவீதம் | சதவீதம் |
| **இலாபத்தன்மை விகிதம்** | | | |
| தேறியலாப விகிதம் | 9.30 | 35.22 | 28.85 |
| தேறிய வட்டி எல்லை | 3.76 | 7.84 | 7.09 |
| வட்டி வருமானத்திற்கான தேறிய வட்டி வருமானம் | 33.87 | 91.51 | 88.91 |
| மொத்த வருமானத்திற்கான தேறிய வட்டி வருமானம் | 4.26 | 3.69 | 5.35 |
| வட்டி வருமானத்திற்கான வட்டி கிரயம் | 66.13 | 8.49 | 11.09 |
| செயற்பாட்டு செலவினங்களிற்கான பதவியணி கிரயம் | 51.14 | 52.12 | 54.94 |
| சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் | 1 | 3.03 | 2.36 |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் | 18.3 | 5.30 | 4.07 |
| பங்கொன்றிற்கான உழைப்புக்கள் | - | 7.17 | 5.34 |
| **மூலதன போதுமை விகிதம்** | | | |
| (i) தட்டு i | 13.5 | 75.52 | 69.34 |
| (ii) தட்டு ii | 15.2 | 76.25 | 69.90 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | | |
| திரவச் சொத்துக்கள் விகிதம் (ஆகக்குறைந்தது 20 சதவீதம்) | 61.4 | 1053.37 | 888.18 |
| **சொத்து தரம்** | | | |
| செயற்பாடற்ற முற்பண விகிதம் | 5.28 | 39.2 | 35.2 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சராசரியான உரிமம்பெற்ற விசேட வங்கி (எல்எஸ்பீ) விகிதம் முறையே 3.76 சதவீதம் மற்றும் 9.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 7.84 சதவீத உயர் தேறிய வட்டி எல்லையும் 35.22 தேறிய இலாப விகிதமும் அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) சராசரி எல்எஸ்பீ விகிதம் 66.13 சதவீதம் ஆகக் தொலைவில் காணப்படுகின்ற வட்டி வருமானம் மீதான வட்டிக் கிரயம், 8.49 இனை பிரதிபலிக்கின்றது.

(இ) வங்கியின் மொத்த மூலதன போதுமை விகிதம் 10 சதவீத அதிகுறைந்த தேவைகளை விட அதிகபடியான உயர் மட்டமான 76.25 சதவீதத்தில் காணப்படுகின்றது.

(ஈ) வங்கியின் திரவச் சொத்து விகிதம் அதிகுறைந்த தேவையான 20 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான சதவீதம் 1053.37 வரை மேலும் அதிகரித்திருந்தது.

(உ) சராசரி சொத்துக்களின் மீதான திரும்பலின் துறை விகிதம் 1 சதவீதத்தினை விட மேலாக 3.03 சதவீதத்தினை வங்கி பதிவுசெய்திருந்தது. எவ்வாறாயினும், உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் துறை விகிதத்தினை விட அதி தொலைவிலுள்ளது.

(ஊ) சராசரி எல்எஸ்பி விகிதம் 5.28 சதவீதத்தினை விட அதிக தொலைவில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான உயர் செயலற்ற கடன்கள் (என்பிஎல்) 39.2 விகிதம் அவதானிக்கப்பட்டிருந்தது.

### 3.3.2 வங்கியின் திரவத்தன்மை இடைவெளி

2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான வங்கியின் நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புக்களின் முகப்பினை பகுப்பாய்கையில், மொத்தச் சொத்துக்களினை மிகைத்து மொத்தப் பொறுப்புக்கள் 5 வருட காலப்பகுதிக்கு மேலாகக் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டமையினால், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பொருத்தமற்றதொரு முதிர்ச்சியை பிரதிபலிக்கின்றது.

| | 3 மாதங்கள் வரை | 3-12 மாதங்கள் வரை | 1-3 வருடங்கள் வரை | 3-5 வருடங்கள் வரை | 5 வருடங்களுக்கு மேலாக |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| சொத்துக்கள் | 1,667,411,700 | 4,570,961,357 | 1,032,845,349 | 878,186,206 | 522,489,334 |
| பொறுப்புக்கள் | 157,559,403 | 80,218,392 | 28,155,941 | 17,757,285 | 8,388,202,925 |
| வித்தியாசம் | 1,509,852,297 | 4,490,742,965 | 1,004,689,408 | 860,428,921 | (7,865,713,591) |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

### (அ) பிரதான நோக்கங்களின் அடைதல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வியாபார திட்டத்தில் விபரிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான இலக்குகளின் அடைதல்கள் தொடர்பான வங்கியின் செயலாற்றல் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| இலக்குகள் | உண்மையான செயலாற்றல் |
| --- | --- |
| கிளை வலைப்பின்னலினூடாக வைப்பு தொகுதியினை ரூபா 1,000 மில்லியனால் அதிகரித்தல் | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வைப்பு தொகுதி ரூபா 99.5 மில்லியனால் அதிகரிக்கப்பட்டிருந்தது. |
| அனைத்துக் கிளைகளிலும் இலாப நட்டமற்ற புள்ளியை அடைதல் | மீளாய்வாண்டில் வங்கியின் ஆறு கிளைகள் நட்டத்தில் நடாத்திச் செல்லப்பட்டதுடன் இரண்டு கிளைகள் மாத்திரம் இலாபத்தில் நடாத்திச்செல்லப்படுகின்றன. |
| வங்கியின் கடன் கூடையினை ரூபா 1,500 மில்லியனால் உயர்த்துதல் | முன்னைய ஆண்டு இறுதியுடன் ஒப்பிடுகையில் கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 341.7 மில்லியனால் மாத்திரம் அதிகரிக்கப்பட்டிருந்தது. |
| ஆண்டின் இறுதியில் அறுதி விதிமுறையின் செயலற்ற முற்பணம் (என்பீஏ) மீதியினை 25 சதவீதத்தினை விட குறைந்தல் அல்லது ரூபா 1,200 மில்லியன் வரை குறைத்தல் | முன்னைய ஆண்டு இறுதியுடன் ஒப்பிடுகையில் வங்கியின் எம்பீஏ மீதி 39.2 சதவீதம் அல்லது ரூபா 1,467 மில்லியனுக்கு அதிகரித்திருந்தது. |
| எதிர்கால உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்புக்கு ஊழியர்களின் திறன்களினை மேம்படுத்தல் | முக்கிய நிர்வாக பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்களின் ஆற்றல்களில் பற்றாக்குறை மற்றும் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகளில் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. |
| ஐஎவ்ஆர்எஸ் இனை சந்திக்க இணைந்த வங்கியியல் முறையை அபிவிருத்தி செய்தல் மற்றும் புதிய அறிக்கையிடல் தேவைப்பாடுகள் | தேவையான தகவல்களினை விரைவாக வழங்குவதற்கு நடைமுறையிலுள்ள வங்கியியல் முறைமை போதுமையற்றதாகக் காணப்படுகின்றமை. |

(ஆ) 2012-2016 வரையான காலப்பகுதிக்கு தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், வங்கியின் வியாபார நோக்கங்களின் அடைதல்கள் மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அவற்றின் மீதான முன்னேற்றங்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| வகைகள் | இலக்குகள் | உள்ளபடியானது | முரண்கள் {சாதகம்/ (பாதகம்)} |
|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| வட்டி வருமானம் | 987.8 | 707.3 | (280.5) |
| வட்டிச் செலவினங்கள் | 376 | 60 | 316 |
| வட்டியல்லா வருமானம் | 6.75 | 27 | 20.25 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 300.85 | 258.7 | (42.15) |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 9,000 | 3,675.7 | (5,324.3) |
| வைப்புக்கள் | 4,820 | 420.9 | (4,399.1) |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வட்டி வருமானம், வரிக்கு முன் இலாபம், கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் வைப்புக்கள் ஏனையவற்றின் பிரதான வியாபார படிகளுக்கு கூட்டிணைந்த திட்டத்தில் தாபிக்கப்பட்ட இலக்குகளினை அடைவதற்கு வங்கி தவறியிருந்தது.

(ii) வைப்புக்கள் மற்றும் கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பவற்றை நோக்கிய இலக்குகளின் அடைவு, இலக்குகளுடன் ஒப்பிடுகையில் தொலைவில் காணப்படுகின்றமை.

(iii) திட்டத்தினை நோக்கிய இலக்குகளின் அடைவு வங்கியினால் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) எவ்வாறாயினும், காணப்படுகின்ற கூட்டிணைந்த திட்டம் வினைத்திறனற்றதாகக் காணப்பட்டதிலிருந்து, புதிய கூட்டிணைந்த திட்டமொன்றினை தயாரிப்பதற்கு வங்கி திட்டமிட்டிருந்தது.

**(ஆ) கடன்களின் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) கடன்களின் ஏற்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,289 மில்லியன் தொகையான கடன்களினை வங்கி வழங்கியிருந்ததுடன் 2017 மே 31 இல் உள்ளபடியான அந்தக் கடன்களின் வருமதியாகவுள்ள மீதி ரூபா 928 மில்லியனாகக் காணப்பட்டது. அந்தக் கடன்களில், ரூபா 236 மில்லியன் தொகையொன்று அல்லது 25 சதவீதம் செயலற்ற வகையாகக் காணப்பட்டது.
- 2016 சனவரி 01 இலிருந்து 2017 மே 31 வரையான வங்கியின் கடன் கையேட்டிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காது ரூபா 20 மில்லியன் தனிப்பட்ட கடன் எல்லையினை மிகைத்து 9 வாடிக்கையாளர்களுக்கு ரூபா 697 மில்லியன் கூட்டுத்தொகையான கடன்களினை வங்கி வழங்கியிருந்தது. 2017 மே 31 இல் உள்ளபடியான அந்தக் கடன்களின் வருமதியாகவுள்ள மீதி ரூபா 482 மில்லியனாகக் காணப்பட்டது.

- வங்கியின் வென்னப்புவ கிளை நெல் இருப்புக்களுக்கு எதிராக பிணைக் கடன்களாக மீளாய்வாண்டின் போது ரூபா 65 மில்லியன் தொகையான ஒன்பது குறுங்கால கடன் வசதிகளினை வழங்கியிருந்தது. 2017 மே 31 வரை இந்தக் கடன்களிலிருந்து எவ்வித தனி தவணை வைப்பும் அறவிடப்பட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம், ஏழு நெற் களஞ்சியங்களின் பூட்டுக்கள் உடைக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. மேலும், மூன்று கடன் வசதிகளுடன் தொடர்புடைய நெல் இருப்புக்கள் இருப்பு பிணைகளினை விட குறைவாகக் காணப்பட்டதுடன் மற்றுமொரு மூன்று களஞ்சியங்களில் இருப்புக்கள் கூட காணப்பட்டிருக்கவில்லை.

**(ii) செயலற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் (என்பிஎல்)**

2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்த வருமதி ரூபா 3,675.7 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 1,467 மில்லியன் அல்லது 39.9 சதவீதம் செயலற்றவையாகக் வகைப்படுத்தப்பட்டன. 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான செயலற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **வகை** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மீதி வருமதிகள்** | |
|---|---|---|
| | **தொகை ரூபா.மில்லியன்** | **சதவீதம்** |
| விசேடமாகக் குறிப்பிடப்பட்டவை | 280 | 19 |
| உப நியமம் | 138 | 9 |
| சந்தேகத்திற்குரியவை | 130 | 9 |
| நட்டம் | 919 | 63 |
| **மொத்தம்** | **1,467** | **100** |

2017 மே 31 இல் உள்ளபடியான வருமதியாகவுள்ள ரூபா 516,560,452 செயற்பாடற்ற கடன்களிலிருந்து தனியொரு தவணை வைப்பினை கூட அறவிடமுடியாதிருந்தது.

**(iii) செயற்பாட்டு செயலாற்றல்**

2016 ஆம் ஆண்டிற்கு உழைக்கப்பெற்ற ரூபா 707 மில்லியன் மொத்த வட்டி வருமானத்தில் ரூபா 339 மில்லியன் அல்லது 48 சதவீதம் மாத்திரம் கடன்கள் மற்றும் முற்பணங்களினை வழங்குவதினூடாக உழைக்கப்பட்ட வட்டி வருமானமாகக் காணப்பட்டமை மையப்பாக வங்கியியல் செயற்பாடுகளின் மீது குறைந்த கவனத்தினை பிரதிபலிக்கின்றது. ஆகையினால், ஏனைய மூலங்களில் அதன் மிகை நிதிகளினை முதலிடுவதன் மூலம் ரூபா 368 மில்லியன் வட்டி வருமானமொன்றினை உழைப்பதற்கு வங்கிக்கு முடியாதிருந்தால், ரூபா 109 மில்லியன் செயற்பாட்டு நட்டமொன்றினை வங்கி தாங்கிக் கொள்ள நேரிடலாம்.

**(இ) வைப்புக்கள்**

வங்கியின் வைப்பு தளம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ரூபா 520 மில்லியனிலிருந்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியானது ரூபா 420.8 மில்லியன் வரை குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19 சதவீதமான பற்றாக்குறையொன்றினை பிரதிபலிக்கின்றது.

**(ஈ) வங்கியின் சந்தைப் பங்கு**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளுக்கான வங்கியின் சந்தைப்பங்கு கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் வைப்புக்களின் அடிப்படையில் வங்கியியல் துறை மற்றும் உரிமம் பெற்ற விசேட வங்கியியல் துறையுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| **ஆண்டு** | **வங்கியியல் துறையின் சதவீதமொன்றாக** | | **அனுமதி பெற்ற விசேட வங்கியியல் துறையின் சதவீதமொன்றாக** | |
|---|---|---|---|---|
| | **கடன்கள் மற்றும் முற்பணங்களின் அடிப்படையில்** | **வைப்புக்களின் அடிப்படையில்** | **கடன்கள் மற்றும் முற்பணங்களின் அடிப்படையில்** | **வைப்புக்களின் அடிப்படையில்** |
| **2016** | 0.07 | 0.01 | 0.69 | 0.05 |
| **2015** | 0.07 | 0.01 | 0.73 | 0.07 |
| **2014** | 0.07 | 0.01 | 0.62 | 0.05 |
| **2013** | 0.07 | 0.01 | 0.70 | 0.04 |
| **2012** | 0.08 | 0.01 | 0.78 | 0.04 |

வங்கியின் ஒட்டுமொத்த சந்தைப் பங்கு 5 வருட காலப்பகுதிக்கு மேலாக 1 சதவீதத்தினை விடக் குறைவாகக் காணப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாகக் காணப்பட்ட ரூபா 2,798,093 ஆன இனங்காணப்படாத வாடிக்கையாளர் வைப்புக்களினை இனங்கண்டு மற்றும் திருத்துவதற்கு வங்கி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) எனது முன்னைய ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகளில் அறிக்கையிடப்பட்ட அந்த குறைபாடுகளின் மீள் இடம்பெறுகை மீளாய்வாண்டிலும் கூட அவதானிக்கப்பட்டன.

(இ) இலங்கை மத்திய வங்கியிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது உதவி பொது முகாமையாளர், தகவல் தொழில்நுட்பம் (ஏஜீஎம் - ஐரீ) இனை உதவி பொது முகாமையாளர், மனித வளங்கல் மற்றும் நிர்வாகம் (ஏஜீஎம் - எச்ஆர்) ஆக வங்கி நியமித்திருந்தது.

## 4.3 செயற்பாட்டு பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எக்ஸாத் தீவாறா யுடன திரிப்ட் (Eksath Deewara Udana Thrif) மற்றும் கடன் கூட்டுறவு சமூகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 5 மில்லியன் தொகையான கடன் ஒன்றினை அறவிடுவதற்கு தாக்கல் செய்யப்பட்ட சட்ட வழக்கொன்றின் மீது மேல் மாகாண உயர் நீதிமன்றத்தினால் அவ்வாறான கடன் வழங்குகையில் வங்கியினால் தவறான நடைமுறை பின்பற்றப்பட்டமை மற்றும் ஆவணங்களில் குறைபாடுகள் காரணமாக வங்கிக்கு எதிராக தீர்ப்பொன்று வெளியிடப்பட்டிருந்தது.

(ஆ) வங்கி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட தள வைத்தியசாலைகளுக்கிடையே வாடகை உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும், ஹம்பாந்தோட்டை கிளைக்குச் சொந்தமான கட்டிடத்தின் பகுதி வைத்தியசாலை தங்கும் இட செயற்பாடுகளின் நோக்கத்திற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன் அது 2015 யூலை 16 இல் காலாவதியாகியிருந்ததுடன், 2017 மே 31 வரையேனும் வாடகை உடன்படிக்கையினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 வங்கியினால் மற்றும் வங்கிக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட சட்ட நடைமுறைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 மே 01 வரை வங்கியினால் தாக்கல் செய்யப்பட்ட 153 சட்ட வழக்குகளில், 19 வழக்குகளுக்கு மாத்திரம் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 3 தீர்ப்புக்கள் வங்கிக்கு பாதகமாகக் காணப்பட்டன. பதிவழிப்பு உத்தியோகத்தர் காணப்பட்டமையின் காரணமாக தவறிய வாடிக்கையாளர்களுக்கு எதிராக பதிவழிப்பு கட்டளைகளினை வங்கி பெற்றிருக்கவில்லை. அதேவேளை நீதிமன்றத்திலுள்ள வாடிக்கையாளர்களுடன் வந்த தீர்ப்பனவுகளின் பிரகாரம் வருமதியாகவுள்ள கடன்களினை அறவிடுவதற்கு வங்கி தவறியிருந்தது.

(ii) 2017 மே 01 இல் பதவியணியினால் 5 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டிருந்த வேளை சமநிலை வித உரிமையின் செயற்படுத்தலுக்கு (Execution of Parate right) எதிராக கடனாளிகளினால் வங்கிக்கு எதிராக 10 சட்ட வழக்குகள் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

## 4.5 மனித வளங்கள் முகாமைத்தும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** பதவியணியினரில் உள்ளடக்கப்பட்ட 181 உத்தியோகத்தர்களுக்கு 2013 ஆம் ஆண்டில் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அதிகாரம் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பதவியணியினரை மீளாய மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து மீளமைக்கப்பட்ட பதவியணியினர்க்கு அங்கீகாரத்தினை பெறுவதற்கு, 2013 ஆகஸ்ட் 13 இல் திறைசேரி செயலாளர் வங்கிக்கு அறிவுறுத்தியிருந்தார். எவ்வாறாயினும், அவ்வாறான மீளாய்வினை மேற்கொள்ளாது, சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக காணப்படுகின்ற பதவியணியினரை 191 வரை வங்கி அதிகரித்திருந்தது.

**(ஆ) பதவியுயர்வுகள்**

(i) 2015 ஒக்தோபர் 16 இல் நடாத்தப்பட்ட சபை கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம், வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் அவ்வாறான எவ்வித பதவியும் காணப்படாத சிரேஷ்ட முகாமையாளர் (ஒட்டுமொத்த கிளை மேற்பார்வை) பதவிக்கு உத்தியோகத்தரொருவர் பதவி உயர்த்தப்பட்டிருந்தார்.

(ii) 2015 செப்தெம்பர் 15 ஆந் திகதிய HR/15/685 ஆம் இலக்க உள்ளக நாபகக்குறிப்பு சிரேஷ்ட முகாமையாளர் பதவியின் பதவி உயர்வுக்கு உள்ளக வேட்பாளர்களினால் 4 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2015 ஒக்தோபர் 16 இல் நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் பிரகாரம், நேர்முகப் பரீட்சையில் முதல் இடத்தை பெற்றதை கருத்திற்காள்ளாது இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களினைப் பெற்ற உத்தியோகத்தர்களினை சிரேஷ்ட முகாமையாளர்களாக பதவி உயர்த்துவதற்கு சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், 2017

மார்ச் 17 இல் நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2015 நவம்பர் 01 இலிருந்து அமுலுக்கு வரும்வகையில் உயர் புள்ளிகளினைப் பெற்ற உத்தியோகத்தர் சிரேஷ்ட முகாமையாளராக பதவி உயர்த்தப்பட்டிருந்தார்.

**(இ) ஆட்சேர்ப்புக்கள்**

பயிலுனர் வங்கியியல் உதவியாளர்கள், பயிலுனர் வியாபார அபிவிருத்தி உதவியாளர்கள், வங்கியியல் உதவியாளர்கள் மற்றும் முகாமைத்துவ பயிலுனர்கள் பதவிக்கு 2015/2016 காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புக்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த ஆட்சேர்ப்புக்களுக்கான தேவைப்பாடு கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) தனிநபர் கோவைகளின் மீது நடாத்தப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்புக்களில், மேற்குறித்த பதவிகளுக்கு தலைவரினால் விண்ணப்பங்களுக்கு பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2007 இன் 12 ஆம் இலக்க வங்கியியல் அதிகாரச்சட்ட வழிகாட்டலினால் அவ்வாறு செய்வதற்கு அவருக்கு அனுமதிக்கப்பட்டிராத போதிலும் நியமன கடிதங்கள் கூட தலைவரினால் கையொப்பமிடப்பட்டிருந்தது.

(iii) வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம், பயிலுனர் வங்கியியல் உதவியாளர்கள், வங்கியியல் உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உதவியாளர்களின் கீழ் பதவிகளின் எண்ணிக்கை 73 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான பதவியிணியினர் 96 ஆகக் காணப்பட்டமையினால், 23 ஊழியர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மிகைத்துக் காணப்படுகின்றனர்.

**(ஈ)** க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியினை பெற்ற இரண்டு வேட்பாளர்கள் வங்கியியல் உதவியாளர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், கல்வித் தகைமைகளுக்கு பிற்சேர்க்கையாக அவர்களினால் இரண்டு டிப்ளோமா சான்றுப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கல்விசார் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ்கள் தொடர்பாக கணக்காய்வில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) வங்கியின் தலைவர் மேற்குறித்த கல்விசார் நிறுவகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராகக் காணப்பட்டார்.

(ii) மேற்குறித்த நிறுவகம் தொழிற்கல்வி பயிற்சி ஆணைக்குழுவாக பதிவு செய்யப்பட்டிருந்தமையினால், அது டிப்ளோமா சான்றிதழ்களினை வழங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ)** வங்கியின் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் 16 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த உத்தியோகத்தர்கள் அதிகுறைந்த வயது தேவைப்பாடுகளினை மற்றும் தேவையான தகைமைகளினை பூர்த்தி செய்திருக்கவில்லை. மேலும், தேவையான தகைமைகளினைக் கருத்திற்கொள்ளாது, 2017 மே 31 இல் 7 ஊழியர்களின் சேவையினை வங்கி உறுதிப்படுத்தியிருந்தது.

**(ஊ)** தேவையான தகைமையினை பூர்த்தி செய்யாதிருந்த ஒரு நபர் முகாமைத்துவ பயிலுனர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், மேற்குறித்த ஊழியர்க்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்ததுடன், ஊழியரினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளினை கருத்திற்கொண்ட பின்னர் பயிலுனர் வங்கியியல் உதவியாளராக அவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

**(எ)** 2015/2016 ஆம் ஆண்டின் போது முகாமையாளர்கள், பயிலுனர் வங்கியியல் உதவியாளர்கள், பயிலுனர் வங்கியியல் அபிவிருத்தி உதவியாளர்கள், சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் பதவிக்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்திருந்த இருபது நபர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். இருப்பினும், 2017 யூன் 30 வரையிலும் அவர்களினை நிரந்தரமாக்குவதற்கு வங்கி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.6 ஓய்வூதிய நலக் கட்டுப்பாடு

ஓய்வூதிய நலக் கட்டுப்பாடுகளாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் ரூபா 21,684,018 தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், எதிர்கால கடப்பாட்டினை குறைப்பதன் பொருட்டு அந்த தொகையினை முதலிடுவதற்கு வங்கி நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 5 ஊழியர்களாயினும், உள்ளகக் கணக்காய்வு பிரிவில் நான்கு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், வங்கியின் 8 கிளைகள் மற்றும் தலைமை அலுவலகத்தின் திணைக்களங்கள் அவர்களினால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டியிருந்தது.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான விடயங்களுக்கும் இடையில் 72 சதவீதம் வரை குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் வங்கியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **கட்டுப்பாட்டுப் பரப்பு** | **அவதானிப்பு** |
| --- | --- |
| (அ) கணக்கீடு | இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடு மற்றும் நட்டக்கழிவு ஏற்பாட்டின் கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கடன் நிர்வாகம் | - | அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறைகளுடன் இறுக்கமான இணக்கத்தின் தேவைகள் |
| | | - | கடன் மதிப்பீட்டு செயல்முறையின் பற்றாக்குறை |
| | | - | உயர் செயற்பாடற்ற கடன் விகிதம் நிலவுகின்றமை |
| | | - | அடமான ஆதனங்களின் துல்லியத்தன்மை சரிபார்ப்பு |
| | | - | தீர்ப்பனவு செய்யப்படாத கடன்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுத்தல் |
| (இ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | - | ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவி உயர்வுகளில் குறிப்பிடப்பட்ட விதிகளைப் பின்பற்றுதல். |
| | | - | தொடர்புடைய பதவிகளுக்கு தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு |
| | | - | உத்தியோகத்தர்களுக்கு முறையான பயிற்சிகளினை வழங்குதல். |
| (ஈ) | கூட்டிணைந்த ஆளுகை | - | கூட்டிணைந்த ஆளுகை வழிகாட்டல்களுடன் இணங்குதல். |
| | | - | வழிகாட்டுதல்கள் மீதான மேற்பார்வை மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட வழிநடாத்துதல்கள். |